புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஏப்ரல் 04, 2024 • புரட்சி 24 • முழக்கம் 12 • விலை ரூ.3.00

# அமலாக்கத்துறை சுதந்திரமாகச் செயல்படுகிறதா?

## மோடியின் அண்டப் புளுகு! ஆகாசப் புளுகு!

எதிர்க்கட்சியினரை ஒடுக்குவதற்கான ஆயுதமாக அமலாக்கத்துறையை மோடி அரசு பயன்படுத்துகிறது என்ற குற்றச்சாட்டு புதிதல்ல. சமீபத்தில் தந்தி தொலைக்காட்சிக்கு பிரதமர் மோடி அளித்த பேட்டியில் நெறியாளர் இதை கேள்வியாக வைத்திருந்தார்.

அதற்குப் பதிலளித்த பிரதமர் மோடி, அமலாக்கத்துறையை நாங்களா உருவாக்கினோம்? பணமோசடி தடுப்புச் சட்டத்தை (PMLA) நாங்களா கொண்டு வந்தோம்? அமலாக்கத்துறை ஒரு சுதந்திரமான அமைப்பு. சுதந்திரமாக அவர்களுடைய பணிகளை மேற்கொள்கிறார்கள். நாங்கள் அமலாக்கத்துறையை நிறுத்தவும் இல்லை, அனுப்பவும் இல்லை. அமலாக்கத்துறை சுமார் 7,000 வழக்குகள் பதிவு செய்திருக்கிறது. அதில் அரசியல் சார்பான வழக்குகள் 3 விழுக்காட்டுக்கும் குறைவுதான். காங்கிரஸ் ஆட்சியில் 35 லட்சம் ரூபாய் மட்டுமே பறிமுதல் செய்யப்பட்டது. ஆனால் பாஜக ஆட்சியில் 2,200 கோடி ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது” என்று கூறியுள்ளார்.

அமலாக்கத்துறையின் தரவுகள் அடிப்படையில் மோடியின் பேச்சு குறித்து சில கேள்விகளை எழுப்ப வேண்டியிருக்கிறது. இந்த PMLA சட்டமானது 2002ஆம் ஆண்டு பாஜக ஆட்சியில்தான் இயற்றப்பட்டது. சர்வதேச போதைப்பொருள் கடத்தல் மூலம் உருவான கறுப்புப் பணத்தைக் கட்டுப்படுத்துவதற்காக இச்சட்டம் என்று அப்போது கூறினர். 2012ஆம் ஆண்டில் காங்கிரஸ் அரசாங்கம் அதில் சில திருத்தங்களை கொண்டு வந்தது. பின்னர், 2019ஆம் ஆண்டில் பாஜக அரசு சில திருத்தங்களை செய்து இச்சட்டத்தை கொடூரமானதாக மாற்றியது. முதன்முதலில் 40 குற்றங்களுக்கான 6 சட்டங்கள் மட்டுமே இருந்தது. இப்போது 140 குற்றங்களுக்கான 30 சட்டங்கள் இதில் இணைக்கப்பட்டுவிட்டன.

காவல்துறை மற்றும் பிற விசாரணை அமைப்புகளால் வழக்குப் பதியப்பட்டிருந்தால் மட்டுமே அமலாக்கத்துறை அதை கையிலெடுக்கும் என்று பிரதமர் மோடி கூறுகிறார். ஆனால் PMLA சட்டப்படி அமலாக்கத்துறை தன்னிச்சையாக செயல்படுகிறது. அமலாக்கத்துறை விசாரிக்கும் முன் பிற விசாரணை அமைப்புகளால் முதல் தகவல் அறிக்கை அல்லது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்ற விதிமுறையும் தளர்த்தப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டில் உச்சநீதிமன்ற நீதிபதி கான்வில்கர் தலைமையிலான அமர்வு, பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் ஜாமின் பெறுவதை கடுமையாக்கியது. ஒருவர் மீது குற்றம்சாட்டப்பட்டாலே போதும், அதற்கான ஆவணங்களை அமலாக்கத்துறை தருகிறதோ இல்லையோ, நிரபராதி என்று நிரூபிக்க வேண்டியது சம்மந்தப்பட்ட நபருடைய பொறுப்பு என்ற அளவுக்கு மோசமான தீர்ப்பை வழங்கியது. அமலாக்கத்துறையின் அதிகாரப் பரவலை மேலும் விரிவுபடுத்துவதாக இத்தீர்ப்பு அமைந்தது. கான்வில்கர் ஓய்வு பெறுவதற்கு 2 நாட்களுக்கு முன்பு வழங்கியது இத்தீர்ப்பு.

அமலாக்கத்துறை சம்மன் அனுப்ப, கைது செய்ய, வாக்குமூலங்களை பதிவு செய்ய, சோதனையிட, சொத்துக்களை பறிமுதல் செய்ய அதிகாரங்களை நீட்டித்து தீர்ப்பை எழுதினார் கான்வில்கர். இத்தீர்ப்பின் அடிப்படையில் இப்போதெல்லாம் சந்தேகத்தின் பேரிலேயே அமலாக்கத்துறை கைது செய்ய முடிகிறது. கைதுக்கான காரணங்களை தெரிவிப்பதில் கூட வெளிப்படைத்தன்மை இல்லை.

அமலாக்கத்துறையின் தரவுகளின்படி 2005 முதல் 2023 மார்ச் வரை 5,906 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் மோடி இப்போது 7,000 வழக்குகள் என்று சொல்கிறார். அப்படியானால் கடந்த ஓராண்டில் மட்டும் 1,000-க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளனவா என்ற கேள்வி எழுகிறது. அதில் 25 வழக்குகள் மட்டுமே இதுவரை முடிவை எட்டியுள்ளன. மற்ற வழக்குகள் அனைத்தும் இன்னும் நிலுவையில்தான் இருக்கின்றன.

அரசியல்வாதிகள் மீது வழக்குப் பதிவது முந்தைய காங்கிரஸ் ஆட்சியைக் காட்டிலும் பாஜக ஆட்சியில் 4 மடங்கு அதிகரித்துவிட்டது. ஒட்டுமொத்தமாக 176 இந்நாள் மற்றும் முன்னாள் எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் மற்றும் எம்.எல்.சி.-க்கள் மீது அமலாக்கத்துறை வழக்குப் பதிந்திருகிறது. அதில் 121 அரசியல்வாதிகள் மீதான வழக்குகள் 2014-க்குப் பிறகு பதியப்பட்டது. இந்த 121 பேரில் சோதனைக்குள்ளானவர்கள், வழக்குப் பதியப்பட்டவர்கள், சிறைபடுத்தப்பட்டவர்களில் 115 பேர் எதிர்க்கட்சியினர். அதாவது 95% எதிர்க்கட்சியினர் மட்டுமே குறிவைக்கப்பட்டிருக்கின்றனர். ஜார்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரென். டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், சந்திரசேகர ராவின் மகள் கவிதா போன்றோர் இந்த ஆண்டில் கைது செய்யப்பட்டவர்கள். கடந்த ஆண்டில் மணீஷ் சிசோடியா, செந்தில்பாலாஜி போன்றோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2022ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஒன்றிய இணையமைச்சர் பங்கஜ் சவுதரி நாடாளுமன்றத்தில் எழுத்துப்பூர்வமாக அளித்த தகவல்படி, 2004 - 2014 வரையில் பணமோசடி தொடர்பாக 112 இடங்களில் சோதனை நடத்தியிருந்தது. ஆனால் 2014- 2022 வரையில் 2,974 அமலாக்கத்துறை சோதனை நடந்திருக்கிறது. இது 26 மடங்கு அதிகமாகும். சோதனைக்குள்ளான பல நிறுவனங்கள் தேர்தல் பத்திரங்கள் மூலம் பாஜகவுக்கு பல கோடி ரூபாய்களை நன்கொடையாக வாரி இறைத்தது சமீபத்தில் அம்பலமானது. அதையும் இதனோடு இணைத்துப் பார்க்க வேண்டும்.

அமலாக்கத்துறையின் விசாரணைப் பிடியில் இருந்தவர்கள் பாஜகவில் இணைந்துவிட்டாலோ அல்லது பாஜகவுக்கு ஆதரவளித்துவிட்டாலோ மட்டும் புனிதர்களாகி விடுவார்கள். பாஜகவுக்கு ஆதரவு அளிப்பவர்கள் அல்லது பாஜகவில் இணைபவர்கள் மிரட்டலுக்கு அஞ்சியே இம்முடிவை எடுக்கிறார்கள். ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளான 25 எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கடந்த 10 வருடங்களில் பாஜகவுக்கு சென்றுவிட்டார்கள். அதில் 3 பேருடைய வழக்குகள் முடித்து வைக்கப்பட்டுவிட்டது. 23 பேரின் வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆம் ஆத்மி கட்சியை சேர்ந்த டெல்லி அமைச்சர் அதிஷி, தன்னை பாஜகவில் இணையச் சொல்லி வற்புறுத்துவதாக கூறியிருக்கிறார். இல்லாவிட்டால், அமலாக்கத்துறை கைது செய்யும் என்று சிலர் மிரட்டுவதாக அவர் கூறியிருக்கிறார். கைது செய்யப்படுபவர்கள் மீது குற்றச்சாட்டை நிரூபிக்கவும், ஆதாரங்களை சமர்பிக்க முடியாமலும் அமலாக்கத்துறை அதிகாரிகள் தடுமாறுகின்றனர்.

அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டிருக்கிற மதுபானக் கொள்கை வழக்கில், 6 மாதங்களுக்கு முன்பே கைது செய்யப்பட்ட சஞ்சய் சிங்கிற்கு இப்போது உச்சநீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது. ஆதாரங்களை சமர்பிக்க முடியாவிட்டால் ஏன் மாதக்கணக்கில் சிறையிலேயே வைத்திருக்க வேண்டும்? ஏன் நீங்களும் ஜாமின் வழங்க எதிர்க்கிறீர்கள் என உச்சநீதிமன்றம் வேறொரு வழக்கில் சரமாரியாக கேள்வி எழுப்பியிருக்கிறது. உண்மையிலேயே அமலாக்கத்துறை சுதந்திரமாகத்தான் செயல்படுகிறது என்றால், விசாரணை வளையத்தில் இருக்கிற 14 நிறுவனங்கள் எப்படி பல கோடி ரூபாயை பாஜகவை தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடை கொடுத்திருக்கின்றன என்பதையும் மோடி விளக்க வேண்டும்.

# பார்ப்பனர்களை புறக்கணிக்கிறதா பாஜக?

திராவிட முன்னேற்றக் கழகம் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலில் ஒரு இசுலாமியரைக் கூட தேர்வு செய்யவில்லை என்று அதிமுகவினரும், பாஜகவினரும் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டார்கள். அதிமுக வேட்பாளர் பட்டியலிலும் ஒரு இசுலாமியர் கூட இல்லாததை அடுத்து, இந்த விவாதம் தானாக ஓய்ந்துவிட்டது. இசுலாமியர்களுக்கு திமுக இடம் ஒதுக்கியிருக்க வேண்டுமென்பது நியாயமான கேள்விதான். இராமநாதபுரத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இசுலாமியர்களுக்கு ஏன் சீட் ஒதுக்கவில்லை என பாஜக ஆதரவாளர்கள் கேட்கும் கேள்விதான் நகைப்பை ஏற்படுத்துகிறது.

நாமும் அவர்களை நோக்கி ஒரு கேள்வி எழுப்ப வேண்டியிருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலில் தி.மு.க., அ.தி.மு.க. கூட்டணியில் ஒரு பார்ப்பனர் கூட வேட்பாளர்களாக இல்லை. ஆனால் பார்ப்பனக் கட்சியான பாஜகவும் ஒரு தொகுதியில்கூட பார்ப்பனர்களை நிறுத்த முன்வரவில்லையே ஏன்? எந்த பார்ப்பனராவது பாஜகவை நோக்கி இக்கேள்வியை எழுப்பினார்களா என்றால் நிச்சயம் இல்லை. வேட்பாளராக தங்களை நிறுத்தாவிட்டாலும், பாஜக பார்ப்பனர்களுக்கான கட்சிதான், மீண்டும் பாஜக ஆட்சிதான் அமைய வேண்டுமென்ற நோக்கத்திற்காக பார்ப்பனர்கள் அமைதி காக்கிறார்கள்.

பார்ப்பனரான மாலன் நாராயணனிடம் இதுகுறித்து ‘தி பிரிண்ட்’ ஊடகம் கேள்வி ஒன்றை எழுப்பியிருக்கிறது. “ஒருகாலத்தில் பாஜக என்றால் பார்ப்பன கட்சி என்ற பார்வை இருந்தது. ஆனால் அதை உடைக்க 10 ஆண்டுகளாக பாஜக முயற்சித்து வருகிறது. ஏனென்றால் இந்த பிம்பத்தால் வாக்குகள் கிடைக்காது” என்று அவர் கூறியிருக்கிறார். ஆக, எல்லா சமூகங்களின் வாக்குகளும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே பாஜக பார்ப்பன வேட்பாளர்களை தவிர்த்திருக்கிறது. ஆனால் சூத்திரர்களின் வாக்குகளைப் பெற்று, அதிகாரத்தைக் கைப்பற்றி பின்னர் பார்ப்பனர்களின் நலனுக்காகவே பாஜக உழைக்கும் என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். இத்தகைய கண்ணாமூச்சி விளையாட்டை நம்பும் அளவுக்கு தமிழ்நாட்டு மக்கள் ஏமாளிகள் இல்லை.

## தலையங்கம்

# வேலைவாய்ப்பு எங்கே?

நாடாளுமன்றத் தேர்தலில் எதிரொலிக்கும் முக்கிய பிரச்னைகளில் ஒன்றாக வேலைவாய்ப்பின்மையும் இருக்கிறது. கடந்த 10 ஆண்டுகால பாஜக ஆட்சியில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான ஆக்கப்பூர்வ முன்னெடுப்பு எதுவுமே மேற்கொள்ளப்படவில்லை. ஆண்டுக்கு 2 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்குவதாக வாக்குறுதி அளித்துவிட்டு, பக்கோடா விற்று பிழைத்துக்கொள்ளுங்கள் என்று பிரதமரே அறிவுறுத்தியதுதான் மிச்சம். ஒருவாரத்திற்கு முன்பு கூட ஒன்றிய தலைமைப் பொருளாதார ஆலோசகர் அனந்த நாகேஸ்வரன் இதுகுறித்து மிக மோசமான கருத்துக்களை உதிர்த்தார். "வேலைவாய்ப்பு போன்ற அனைத்து சமூக மற்றும் பொருளாதார பிரச்னைகளையும் அரசே தீர்க்க முடியாது. முதலீடுகள் அதிகரிக்கும்போது வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும்" என்றார்.

வேலைவாய்ப்பின்மையின் தீவிரமே ஒன்றிய பாஜக அரசுக்கு புரியவில்லை அல்லது புரிய வேண்டும் என்ற அவசியம் அவர்களுக்கு ஏற்படவில்லை என்பதைத்தான் இக்கருத்துகள் உணர்த்துகின்றன. மதத்தின் பெயரால் மக்களைத் திரட்டி வாக்குகளை அறுவடை செய்துவிடலாம், அதற்கு ராமர் கோயில் ஒன்றே போதுமானது என பாஜகவினர் கருதிக் கொண்டிருக்கிறார்கள் போல. India Employment Report 2024 வேலைவாய்ப்பின்மை பிரச்னையின் தீவிரம் எந்த அளவுக்கு மோசமாக இருக்கிறது என்பதை உணர்த்துகிறது. 2022-ஆம் ஆண்டு கணக்குப்படி நாட்டில் வேலைவாய்ப்பு அற்றவர்களில் இளைஞர்கள் மட்டுமே 82.9 விழுக்காடு.

அதேபோல தொழிலாளர் பங்கேற்பு விகிதத்தில் இளைஞர்களின் பங்கு 2000ஆம் ஆண்டில் 54%-ஆக இருந்தது. அதை 2022-ஆம் ஆண்டில் 42%-ஆகக் குறைத்ததுதான் மோடி ஆட்சியின் சாதனை. அதிலும் பெண்களின் நிலைமை இன்னும் மோசமாக இருக்கிறது. 2022-ஆம் ஆண்டில் தொழிலாளர் பங்கேற்பு விகிதத்தில் இளம் வயது பெண்கள் 21.7% மட்டுமே. ஒட்டுமொத்தமாகவே 32.8% மட்டுமே பெண்கள் வேலைக்குச் செல்கின்றனர்.

இளைஞர்கள், பெண்களுக்கு மட்டுமே வேலையில்லா திண்டாட்டம் பெரும் சுமையாக இருக்கிறது என்று சுருக்கிவிட முடியாது. பொதுத்துறை நிறுவனங்களே இல்லாத நிலையை நோக்கி நாட்டைத் தள்ளிக்கொண்டிருக்கிற பாஜக ஆட்சியில் ரயில்வே வரை தனியார்மயமாகிவிட்டது. இந்தியாவின் ஜாதிய, மதவாத சூழலுக்குள் இருந்து முளைக்கும் இத்தகைய தனியார் நிறுவனங்களில் பட்டியல் மற்றும் பழங்குடி சமூகத்தினருக்கு உரிய வேலைகள் சரியான ஊதியத்தில் கிடைப்பதில்லை.

குறைந்த ஊதியத்தில் தற்காலிக பணிகளும் அமைப்புசாரா பணிகளும் மட்டுமே பட்டியல் மற்றும் பழங்குடி சமூகத்தினருக்கு கிட்டுகிறது என்பதும் India Employment Report 2024 சொல்லும் முக்கியமான செய்தி.

வளர்ச்சி அடையாத வட இந்திய மாநிலங்களில் இளைஞர்கள் மிக அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் அங்கு அவர்களுக்கு உரிய வேலையும் இல்லை. இருக்கும் வேலைகளுக்கும் மிகச் சொற்பமான ஊதியமே வழங்கப்படுகிறது. அதனால் அவர்கள் தமிழ்நாடு, மகாராஷ்டிரா போன்ற வளர்ந்த மாநிலங்களுக்கு நகர வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதுவும் அமைப்புசாரா வேலைகளுக்கே அதிகம் செல்கின்றனர்.

ஒன்று, மாணவர்களின் உயர்கல்வி விகிதத்தை அதிகரிக்க வேண்டும், இரண்டாவதாக அதற்கேற்ற வேலைகளை உருவாக்க வேண்டும். ஆனால் அதற்கான எந்தத் திட்டமும் மோடி ஆட்சியிடம் இல்லை என்பதுதான் உண்மை. அதற்கெதிரான திட்டங்கள் வேண்டுமானால் அவர்களிடத்தில் கைவசம் ஏராளமாக இருக்கிறது. சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் படிக்கவே கூடாது என்பதற்காகத்தான் புதிய கல்விக் கொள்கையை திணிக்கிறார்கள். பாஜக ஆட்சியின் மதவாத சிக்கல்களால் ஏற்படும் பதற்றங்கள், கலவரங்கள் நிச்சயம் முதலீடுகளை ஈர்க்க அனுமதிக்கப் போவதில்லை. பாஜக ஆளும் மாநிலங்களில் சகிப்புத்தன்மையும், சமூக பாதுகாப்பும் குறைந்துகொண்டே வருவதை சர்வதேச ஆய்வுகளே வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றன. பிறகு எப்படி முதலீடுகள் அதிகரிக்கும்? வேலைவாய்ப்புகள் பெருகும்?

ஆனால் தமிழ்நாட்டில் கடந்த 3 ஆண்டுகளில் 60,000-க்கும் மேற்பட்டோருக்கு அரசுப் பணிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தனியார் துறையைப் பொருத்தவரையில் 8.65 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, 30 லட்சம் வேலைவாய்ப்புகள் கிடைக்கும் சூழலை திமுக அரசு ஏற்படுத்தியிருக்கிறது. 27 லட்சம் பேருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டிருக்கிறது. உலகை ஆளும் மின்னணுத் துறையில் இந்தியாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில், தமிழ்நாடு மட்டுமே தனித்து 30 விழுக்காடு பங்கைக் கொண்டிருக்கும் அளவுக்கு 2 ஆண்டுகளில் மிகப்பெரிய வளர்ச்சியை எட்டியிருக்கிறது.

அதற்குக் காரணம் தமிழ்நாட்டின் பலமான உட்கட்டமைப்பு வசதிகளும், தரமான உயர்கல்வியும்தான். இரண்டையும் சாத்தியப்படுத்தியதுதான் 'திராவிட மாடல்'. இளைஞர்களின் வேலைவாய்ப்புகளை பறித்து வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கிய ஆரிய மாடல் பாஜகவுக்கு நமது வாக்கா? அல்லது திறமையான இளைஞர்களை உருவாக்கி, பல லட்சம் வேலைவாய்ப்புகளை வழங்கிய திராவிட மாடல் திமுகவுக்கு நமது வாக்கா? என்ற விவாதத்தை அனைத்துத் தரப்பு மக்களிடத்திலும் கொண்டு சேர்ப்போம். ஆரிய சனாதன மாடலை வீழ்த்துவோம்.

## வினா விடை

- *புதிய வரி விதிப்பு முறையை நிறுத்திவிட்டோம்; வரி செலுத்துவோர், எது நன்மை பயக்கும் என்று நினைக்கிறார்களோ, அந்த முறையை தேர்வு செய்து கொள்ளலாம் - நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்*

அப்படியா, வரி செலுத்தாமல் இருப்பதுதான் எங்களுக்கு நன்மை பயக்கும் திட்டம், ஓகே வா?

- *தர்மயுத்தம் நடத்தி கச்சத்தீவை மீட்போம் - ஓ பன்னீர்செல்வம்*

கட்சி, சின்னத்தை மீட்க முடியல, இப்போ கச்சத்தீவுக்கு வந்துட்டீங்க, சென்னை உயர்நீதிமன்றத்துல அடுத்த வழக்குக்கு தயாராகிட்டீங்க..

- *சுங்கக் கட்டண உயர்வை திடீரென ஒன்றிய ஆட்சி நிறுத்தம் - செய்தி*

'ஓட்டு'க்காக 'கேட்டு' திறக்குதுன்னு 'நாட்டுக்கு' தெரியும்.

- *இந்தி, சமஸ்கிருத எதிர்ப்பு என்ற 'பிஞ்சு போன செருப்பை' இப்போதும் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். - அண்ணாமலை*

இப்படியே பேசுங்க, பேசிக்கிட்டே இருங்க, தமிழ்நாட்டில் பாஜகவுக்கு சமாதி கட்டுவதை விரைவுபடுத்துங்க.

- *இந்திய மாநிலமான அருணாச்சல பிரதேசத்தில் 30 ஊர்களுக்கு சீன அரசு சீன மொழியில் பெயர் சூட்டியுள்ளது - செய்தி*

கொஞ்சம் பொறுங்க... சீனாவுக்கு அமலாக்கத்துறை – வருமான வரித்துறையை அனுப்பி மீட்டுக் கொண்டுவருவோம். இதுக்கு 'நாங்க கேரண்டி'

- *கலைஞர் நினைவிடத்தை தேர்தல் ஆணையம் மூட வேண்டும், அங்கே கலைஞர் வரலாறு ஒளிபரப்பாகிறது. - தேர்தல் ஆணையத்தில் அதிமுக மனு*

எங்கள் ஆட்சியில் அனுமதி மறுத்த அந்த இடத்தை இப்போதாவது மூடி வைத்து பார்க்கலாம் என்ற அற்ப ஆசை தான்.

- *என் இரண்டு பிள்ளைகளையும் ஆங்கில வழிக் கல்வியில் தான் சேர்த்துள்ளேன். தகுதியான தமிழ்ப்பள்ளி இங்கே எங்க இருக்கு - சீமான்*

சரி விடுங்க.. கேட்டா எங்க அண்ணன் பிரபாகரன் எனக்கு இப்படித்தான் ஆணையிட்டார்னு சொல்லிடுவார்.

- *கச்சத்தீவு வரலாறுகளை அண்ணாமலை 'ஆர்.டி.ஐ' மூலம் பெற்றார் - செய்தி*

சர்வதேச பிரச்சனைகளை எல்லாம் கேட்டு வாங்கிடலாம். ஆனா 'தேர்தல் பத்திரம்' 'பிரதமர் கேர்' போன்ற தேசப் பாதுகாப்பு பிரச்சனைகளைத் தான் 'ஆர்.டி.ஐ' மூலம் கேட்க முடியாது!

- *ஆளுநரின் சுகபோக வாழ்க்கையை விட்டுவிட்டு இப்போது தேர்தலில் நின்று சாலை ஓரக்கடைகளில் உணவு அருந்துகிறேன் - தமிழிசை பிரச்சாரம்*

காந்தி, பகத்சிங் தியாகத்தையும் மிஞ்சிட்டீங்க மேடம்; கவலைப்படாதீங்க, மக்கள் உங்களை மீண்டும் சுகபோக வாழ்க்கைக்கு திருப்பி அனுப்பிடுவாங்க...

- *பாமகவை அதிமுக கடுமையாக தாக்கி பிரச்சாரம் - செய்தி*

இது பாமகவுக்கான எங்கள் கூட்டணி தர்மம், பாஜகவுக்கு வேறு தர்மம்; பண்பாடு கருதி எதிர்க்க மாட்டோம், கூட்டணி தர்மத்தை நாங்க கூறு போட்டு வெச்சிருக்கோம்! ஒற்றை விரலில் ஓங்கி அடிங்க...

- *ராமன் கோயில் திறப்பு தேதியை ராம பகவான் தான் முடிவு செய்தார் - மோடி பேட்டி*

தேர்தல் தேதி – வேட்பாளர் – தொகுதி – தேர்தல் அறிக்கை எல்லாவற்றையும் ஸ்ரீ ராம பகவான் தான் முடிவு செய்திருப்பார் போல. பாவம் அவருக்குத்தான் ஓட்டு இல்ல..

## பெரியார் முழக்கத்திற்கு ரூ.5,000 வளர்ச்சி நிதி

சென்னை : வட சென்னை மாவட்ட அமைப்பாளர் சேத்துப்பட்டு இராசேந்திரன் குடும்பத்தினரின் இல்லத் திறப்பு விழா 14.04.2024 அன்று அயன்புரம் முனுசாமி தெருவில் நடைபெறுகிறது.

இதில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்று பெரியார் – அம்பேத்கர் – மார்க்ஸ் கல்வெட்டை திறந்து வைத்து சிறப்புரையாற்றுகிறார். தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் தந்தை பெரியார் இல்ல கல்வெட்டை திறந்து வைக்கிறார்.

இல்லத் திறப்பு விழாவின் மகிழ்வாக கழக வார ஏடான புரட்சிப் பெரியார் முழக்கம் இதழுக்கு ரூ.5000/– வளர்ச்சி நிதி வழங்கியுள்ளார்.

தொடர்புக்கு : 9445109323, 7550178401

## பாஜகவின் சட்டவிரோத முயற்சி தகர்ப்பு!

*மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட இராயப்பேட்டை வி.எம்.தெரு பெரியார் படிப்பகம் அருகில் 27.02.2024 அன்று பாஜகவினர் தேர்தல் பணிமனையை திறப்பதற்கான ஏற்பாடுகளை செய்து வந்தனர்.*

*தகவலறிந்த திருவல்லிக்கேணி பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள் நேரில் சென்று உரிய அனுமதியின்றி இங்கு பாஜகவினர் தேர்தல் பணிமனையை திறக்க முயற்சிக்கின்றனர். எனவே காவல்துறை இதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்த பின்பு பாஜக தேர்தல் பணிமனை அமைக்கும் முயற்சியை கைவிட்டது.*

# பாஜகவுக்கு ஏன் வாக்களிக்கக் கூடாது?



**விடுதலை இராசேந்திரன்**

கடந்த 10 ஆண்டுகால மோடியின் தலைமையிலான பாஜக ஒன்றிய ஆட்சி நாட்டை சர்வாதிகார பாதையில் கொண்டு சென்றிருக்கிறது. இதனுடைய தாய்ச் சபையான ஆர்.எஸ்.எஸ் இந்தியாவை இந்துராஷ்டிரமாக மாற்ற வேண்டும் என்ற லட்சியத்தை முதன்மையாகக் கொண்டது. அந்த லட்சியத்தை செயல் வடிவமாக்கும் முயற்சியில் தான் பாஜக ஆட்சி தீவிரம் காட்டி செயல்பட்டு வருகிறது. மக்கள் பிரச்சனைகள் அவர்களுக்கு ஒரு பெரிய பிரச்சனைகளே அல்ல. மதச்சார்பற்ற கொள்கையோடு நாடாளுமன்ற ஜனநாயகம் நிலவும் ஒரு நாட்டை மதச் சார்புள்ள ஒரு நாடாக மாற்ற வேண்டும் என்று சொன்னால் அவர்களுக்கு இங்கே ஜனநாயகமும் ஜனநாயகக் கட்டமைப்புகளும் மிகப்பெரிய தடையாக இருக்கின்றன. எனவே ஜனநாயகத்தையும் ஜனநாயகத்தின் நிறுவனங்களையும் சீர்குலைத்து அவைகளை பலவீனம் ஆக்க வேண்டும்.

முதலில் நாடாளுமன்றத்தை பார்ப்போம். நாடாளுமன்ற நடவடிக்கைகள் முற்றிலுமாக சீர் குலைக்கப்பட்டு வருகின்றன. எதிர்க்கட்சிகளின் கருத்துக்கள் ஒட்டுமொத்தமாக நசுக்கப்படுகின்றன. ஒரே நேரத்தில் 116 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்கு வராமல் வெளியேற்றப்பட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு மோசமான நிலை உலகத்தில் எந்த நாட்டிலும் ஏற்பட்டது கிடையாது. பிரதமர் மோடி நாடாளுமன்றத்திற்கு வருவதே கிடையாது. முக்கியமான கேள்வி நேரம் நடக்கின்ற அந்த நேரத்தில் பிரதமர் மோடி நாடாளுமன்றத்துக்கு வந்ததே கிடையாது. எந்த விவாதத்திலும் அவர் தலையிட்டு பேசுவதும் கிடையாது. பட்ஜெட் விவாதமாக இருந்தாலும் சரி குளிர்கால கூட்டத்தொடராக இருந்தாலும் சரி; அவர் ஆற்றும் கடைசி உரை கூட்டங்களிலே பேசுகிற பிரச்சார உரையாக தான் இருந்து வருகிறது. எதிர்க்கட்சி தலைவர்களில் ஒருவரான ராகுல் காந்தி, ஒரு கூட்டத்தில் மோடி என்ற பெயரை கொண்டிருப்பவர்கள் நாட்டைத் திருடுகிறார்கள் என்றார். மோடி என்ற பட்டம் எல்லா ஜாதியிலும் உண்டு, ஆனால் ஒரு ஜாதியை இழிவுபடுத்தியதாக அவதூறு வழக்கு ஒரு பாஜகவினரால் குஜராத்தில் தொடரப்பட்டது. அந்த அவதூறு வழக்கில் அதிகபட்ச தண்டனையாக இரண்டு வருடம் சூரத் நீதிமன்றம் தண்டனை வழங்கியது. நாடாளுமன்றப் பதவியில் இருந்து அவர் வெளியேற்றப்பட்டார்.

கிரிமினல் சட்டம் அமலாகிய கடந்த 165 ஆண்டு கால வரலாற்றில் இந்த சட்டத்தின் கீழ் இரண்டு வருட தண்டனை வழங்கப்பட்டது என்பது இதுதான் முதல் முறை. பிறகு உச்ச நீதிமன்றம் இதில் தலையிட்டு இது மிக மோசமான ஒரு நடவடிக்கை என்று கூறியதற்குப் பிறகு மீண்டும் ராகுல் காந்தி நாடாளுமன்றத்திற்கு வந்தார். எந்த விவாதங்களும் நடப்பதற்கு அனுமதிக்காத நாடாளுமன்றத்தில் கடைசி நேரத்தில் அவசர அவசரமாக விவாதங்கள் இன்றியே 40 மசோதாக்கள், 50 மசோதாக்கள் என்று இவர்கள் மசோதாக்களை கொண்டுவந்து நிறைவேற்றி விடுகிறார்கள். எந்த விவாதமும் அங்கே கிடையாது. விவசாயிகள் சட்டம் பத்தே நிமிடத்தில் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. அதை எதிர்த்து விவசாயிகள் ஒரு வருடத்திற்கு மேல் போராடினார்கள். 700 பேர் போராட்டத்தில் உயிர் பலியானார்கள். பஞ்சாபில் தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு சீக்கியர்கள் வாக்கு வங்கி பறிபோய்விடும் என்ற அச்சத்தின் காரணமாக அவசர அவசரமாக பத்தே நிமிடத்தில் அந்த சட்டம் விவாதங்கள் இன்றி திரும்பப் பெறப்பட்டது. இப்படி ஏராளமாக பட்டியலிட்டு கொண்டே போகலாம்.

### அரசியல் சட்டம் மாற்றப்படும்?

அரசியல் சட்டத்தை திருத்துவதற்கு இவர்கள் தயாராகி விட்டார்கள் என்பதற்கு சான்றாக ஒரு செய்தியை நாம் குறிப்பிட முடியும். பிரதமர் மோடியின் பொருளாதார ஆலோசனைக் குழு உறுப்பினராக இருக்கிற பிவேக் டம்ராய், ஒரு கருத்தை பதிவு செய்திருக்கிறார். ‘மின்ட்’ இணையதளத்தில் அந்தக் கருத்து பதிவாகி இருக்கிறது. இந்திய அரசியல் சட்டம் என்பது பிரிட்டிஷ்காரர்கள் கொண்டு வந்த காலனிய அரசியல் சட்டம். அது காலாவதியாகிப்போன சட்டம். அந்த சட்டத்தை இனியும் வைத்துக் கொண்டிருக்க முடியாது, அது திருத்தப்பட வேண்டும் என்ற ஒரு கருத்தை அவர் வெளிப்படையாக கூறியிருக்கிறார். எதில் எல்லாம் திருத்தம் வரப்போகிறது என்பதையும் அவர் கூறியிருக்கிறார். நீதிபதிகளின் நியமனங்களில், நீதிமன்றங்களின் அதிகார வரம்புகளில், தேர்தல் சட்டங்களில், மாநிலங்களவையில் மாற்றம் செய்வதில் திருத்தங்கள் வரப்போகின்றன. மாநிலங்களின் எல்லைகளும் மாற்றியமைக்கப்பட இருக்கின்றன என்ற கருத்தை அவர் தெரிவித்திருக்கிறார்.

## ராமராஜ்யத்துக்கு அரசியல் சட்டமே கூடாது - சங்கராச்சாரி கூறுகிறார்!

அரசியல் சட்டம் எழுதப்பட்ட போது, அது ராமராஜ்ஜியத்துக்கு எதிரானது என்றார் காஞ்சி சங்கராச்சாரி சந்திரசேகரேந்திர சரஸ்வதி.

“ராமராஜ்யம் ஏற்பட வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தவர்களின் வாரிசுகள் ஜனநாயகம் சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறார்கள். ராமர் புதுசாக ராஜநீதி எதுவும் செய்து (அதாவது சட்டங்களை உருவாக்கி) ராஜ்ய பாரம் நடத்தவில்லை தன் அபிப்பிராயம், தன் காரியம் என்று சொந்தமாக எதுவும் இல்லாமல் முழுக்க முழுக்க சாஸ்திரத்தைப் பார்த்து அப்படியே பண்ணினவர் ஒருவர் உண்டு என்றால் அது ராமச்சந்திர மூர்த்தி தான். மநு தர்மத்தை காலம் முதலாக தசரத சக்கரவர்த்தி வரை எந்த தர்ம சாஸ்திர ஆட்சி நடந்ததோ அதையே தான் ராமரும் நடத்திக்காட்டினார் என்று சங்கராச்சாரி கூறியதோடு பாமர மக்களுக்கு உரிமைகளை வழங்கினால் மோசடிகள் – ஏமாற்றுகள் தொடங்கிவிடும் என்றார். இது குறித்து அவர் கூறியது.

“ஏராளமான பாமர ஜனங்களை நேராக ராஜ்ய விசயங்களில் கொண்டுவருவதில் அநேக தப்புத்தண்டாக்கள், ஏமாற்று மோசடிகள் நடந்துவிடலாம் என்ற கருத்தை அலட்சியம் செய்வதற்கு இல்லை. (தெய்வத்தின் குரல் 4ஆம் பகுதி)

ராமராஜ்யம் என்ற பார்ப்பனிய ஆட்சிக்கு அரசியல் சட்டங்களே கூடாது. மனு உள்ளிட்ட தர்ம சாஸ்திரங்களே சட்டங்கள் என்ற சங்கராச்சாரி கருத்தைத்தான் பாஜக ஆட்சி ஏற்று அரசியல் சட்டங்களின் உள்ளடக்கங்களை சீர்குலைத்து வருகிறது.

மாநிலங்கள் எல்லைகள் மாற்றம் செய்யப்பட இருக்கின்றது என்பதில் தமிழ்நாட்டுக்கும் மிகப்பெரிய ஆபத்து இருக்கிறது. ஏற்கனவே கொங்கு மண்டலத்தை தனி மாநிலமாக அறிவிக்கும் முயற்சிகளில் பாஜகவினர் ஈடுபட்டு எதிர்ப்புகள் பலமாக இருந்ததால் பின்வாங்கினார்கள். மீண்டும் மோடி தலைமையிலான பாஜக ஆட்சிக்கு வந்தால் தமிழ்நாடு பல கூறுகளாக பல மாநிலங்களாக பிரிக்கப்பட்டு, சிதைக்கப்பட்டு தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த அடையாளத்தை ஒழிப்பதற்கான முயற்சிகளில் அவர்கள் ஈடுபடுவதற்கான ஆபத்துகள் இருக்கிறது என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

### நீதிமன்றங்களில் தலையீடு

நாடாளுமன்றத்தை இப்படி சீர்குலைத்தவர்கள், நீதிமன்றங்களையும் சீர்குலைத்துக் கொண்டிருக்கிறார்கள். கொலிஜியம் என்கிற நீதிபதிகள் அடங்கிய அமைப்பு நீதிபதிகளை தேர்வு செய்து கொண்டிருக்கிறது. கொலிஜியம் என்ற அமைப்புக்கு இந்த உரிமை கிடையாது அமைச்சரவை தான் இதை முடிவெடுக்க வேண்டும் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அதை உச்ச நீதிமன்றம் ஏற்காத நிலையில், இப்போது கொலிஜியம் தேர்வு செய்கிற நீதிபதிகளின் பட்டியலுக்கு ஒன்றிய ஆட்சி ஒப்புதல் தர வேண்டும் என்ற நிலை இருக்கிறது. ஒன்றிய ஆட்சியில் இருந்து முன்னாள் ஆர் எஸ் எஸ் காரர்கள், ஆர்எஸ்எஸ் சிந்தனையாளர்கள், நீதிபதிகளாக தேர்வு செய்யப்பட்டு இந்தியாவின் பல மாநிலங்களில் அவர்கள் நீதிபதிகளாக இருக்கிறார்கள். கல்கத்தாவில் நீதிபதியாக இருந்த ஒருவர் நீதிபதி பதவியை விட்டு விலகி அடுத்த நாளே பாஜகவில் சேர்ந்து இப்போது நாடாளுமன்ற தேர்தலில் பாஜக வேட்பாளராக போட்டியிடுகிறார்.

சனாதன எதிர்ப்பு பேசினாலே அது அரசியல் சட்டத்திற்கு விரோதம் என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கருத்து கூறுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணி செயலாளர் திரு உதயநிதி ஸ்டாலின் சனாதன எதிர்ப்பு பேசினார் என்பதற்காக, அவர் மீது வழக்கு தொடரப்பட்டு பல்வேறு மாநிலங்களில் இந்த வழக்குக்காக அவரை அலைக்கழிக்க வேண்டும் என்று முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த வழக்கை ஏற்று சென்னையிலே விசாரித்த அனிதா சுமந்த் என்ற பெண் நீதிபதி, சனாதன எதிர்ப்பு பேசுவதே சட்டத்திற்கு எதிரானது என்று கூறுகிறார். இவர் கேரளாவில் நடந்த உலக ‘பிராமண’ மாநாட்டில் பங்கேற்றுப் பேசியவர்.

அரசியல் சட்டம் அனைத்து குடிமக்களும் சமம் என்று கூறுகிறது. சனாதன தர்மம் சமூகத்தை வர்ண அடிப்படையில் கூறு போட்டு ஏற்றத்தாழ்வான ‘படிக்கட்டு’ சமூக அமைப்பை பேசுகிறது. ஆனால் இந்த நீதிபதி சனாதனம் என்பது அதுவல்ல என்று சொல்லி, அது ஒரு வாழ்க்கை நெறி என்று அதற்கு விளக்கங்களை தந்து கொண்டிருக்கிறார். எல்லாவற்றையும் விட அதை எதிர்த்து பேசுவதே சட்டத்துக்கு விரோதம் என்று சொல்லுகின்ற அளவுக்கு நீதிமன்றம் இன்று அவர்களுடைய பிடியில் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

உச்ச நீதிமன்றத்தில் முற்போக்கு சிந்தனை கொண்ட ஒரு சில நீதிபதிகள் இருக்கின்ற காரணத்தினால் தான், இன்றைக்கு நாடு பல்வேறு பிரச்சனைகளில் காப்பாற்றப்படுகிறது.

**தொடரும்**

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# ஈரோடு, ஆத்தூரில் தேர்தல் பரப்புரை

**ஆத்தூர்** : சேலம் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியக் கழக சார்பில் சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்! என்ற முழக்கத்தோடு 2024 நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஆத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆனைக்கல் மேடு, மணிக்கூண்டு, உடையம்பட்டி, நரசிங்கபுரம், முல்லைவாடி, ராஜேந்திரா பேக்கரி உள்ளிட்ட ஆறு இடங்களில் பிப்ரவரி 25ஆம் தேதி தொடங்கி மார்ச் 15 வரை நடைபெற்றது.

கூட்டத்தின் தொடக்க நிகழ்வாக பெரியார் விழுதுகள் ரிஷிவிந்தன் – அரவிந்தன் ஆகியோரின் பகுத்தறிவுப் பாடல்கள் மற்றும் மகேந்திரன் – கணபதி குழுவின் அரசியல் நையாண்டி நடைபெற்றது.

செல்வராஜ், வெங்கடேஷ், கார்த்திகேயன் ஆகியோர் பரப்புரைக் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி உரையாற்றினர். இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்ப் புலிகள் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.




**ஈரோடு** : ஈரோடு நாடாளுமன்றத் தொகுதியின் ஒரு பகுதியான மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் திராவிடர் விடுதலைக் கழகமும் சமூகநீதி கூட்டமைப்பும் இணைந்து நடத்தும் தேர்தல் பரப்புரைக் கூட்டம் 02.04.2024 அன்று தொடங்கியது.

இதற்கு கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி தலைமை தாங்கினார். இதில் திண்டுக்கல் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மாக்சிம் கார்க்கி, திருப்பூர் முத்து, தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் திருப்பூர் மகிழவன், சேலம் மாநகரச் செயலாளர் ஆனந்தி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பழனிச்சாமி, ஆதித்தமிழர் பேரவை மோகன் நெடுமாறன் உள்ளிட்ட உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டு மோடி ஆட்சி ஏன் தொடரக் கூடாது? என்பதனை விளக்கி, இந்தியா கூட்டணி வெற்றிபெற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி கருத்துரையாற்றினார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள பாஜக சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கும் தொகுதிகளில் தேர்தல் பரப்புரை செய்ய விரும்பும் சமூக செயற்பாட்டாளர்கள் கீழ்கண்ட பொறுப்பாளர்களை தொடர்பு கொள்ளவும்.

**ஈரோடு இரத்தினசாமி – +919842712444, மாக்சிம் கார்க்கி – 6379575713**

# திமுக வேட்பாளர்களுக்கு நேரில் வாழ்த்து!



**மதுரை** : இந்தியா கூட்டணியின் மதுரை நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் சு.வெங்கடேசனை மதுரை மாவட்டச் செயலாளர் மா.பா. மணிஅமுதன் தலைமையில் 31.03.2024 அன்று கழகத் தோழர்கள் நேரில் சந்தித்து ஆதரவையும் வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.

மேலும் இந்திராநகர் பிடி.காலனி, தகர பிள்ளையார் கோவில் தெரு, செல்லூர், மேலத் தோப்பு, கீழத் தோப்பு, மதிச்சியம், நெல்பேட்டை, ஒபுளாபடித்துறை, முனிச்சாலை, அந்தோணி மூப்பனார் தெரு, அனுப்பானடி உள்ளிட்ட பகுதிகளில் வேட்பாளரை ஆதரித்து பரப்புரை செய்தனர்.

இதில் மாவட்டத் தலைவர் காமாட்சிப் பாண்டி, மேலூர் பொறுப்பாளர் சத்திய மூர்த்தி, முருகேசன், கண்ணன் காமாட்சி உள்ளிட்ட கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.



**சென்னை** : எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தென் சென்னை மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி வேட்பாளர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியனை 30.03.2024 அன்று கழகத் தோழர்கள் சந்தித்து தங்களது ஆதரவையும் வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.

கடந்த 8 மாதங்களாக சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய 150க்கும் மேற்பட்ட தெருமுனைக் கூட்டங்கள், சமுதாயத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் குறித்தும் தோழர்கள் எடுத்துரைத்தனர். தோழர்களை வரவேற்று, தமிழச்சி தங்கபாண்டியனோடு MP மகிழ்ச்சியோடு உரையாடினார்.

உடன் விஜய் குமார், ம.கி.எட்வின் பிரபாகரன், இரண்யா, சைதை சிவா, ஸ்ரீ விக்னேஷ், அட்டி அருண், வேளச்சேரி இமானுவேல் துரை ஆகியோர்.



**பொள்ளாச்சி** : இந்தியா கூட்டணியின் பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் ஈஸ்வரசாமியை 24.03.2024 அன்று பொள்ளாச்சி யாழ்.வெள்ளிங்கிரி தலைமையில் கழகத் தோழர்கள் சந்தித்து தங்களது ஆதரவையும் வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.

# திருப்பத்தூரில் இல்ல திறப்பு விழா



திருப்பத்தூர் : வாணியம்பாடியை அடுத்துள்ள புல்லூர் கிராமத்தில் கழக வாணியம்பாடி செயலாளர் சுரேஷ்-இன் இல்லத் திறப்பு விழா மற்றும் கழக கொடியேற்று விழா 17.3.2024 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

விழாவின் தொடக்க நிகழ்வாக ஜெய்கர் - மருது ஆகியோரின் இசை நிகழ்ச்சி அமைந்தது. விழாவை நிலா தொகுத்து வழங்கினார்.

விழாவிற்கு வேலூர் மாவட்டத் தலைவர் திலிபன், மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் இரா.ப.சிவா, மாவட்டப் பொருளாளர் த.சதிஷ் சமத்துவன், பேர்ணாம்பட்டு நகரச் செயலாளர் பார்த்திபன், கஜேந்திரன், ஆசிரியர் பாஸ்கரன், செந்தில், வேலூர் சதிசு, ரேனு, பேர்ணாம்பட்டு ஒன்றிய செயலாளர் அரவிந்த் செயசூர்யா, அமல்ராஜ், முரளி தன்மானன், வழக்கறிஞர் பாலகுமாரன், வழக்கறிஞர் திராவிட பாண்டியன், ஆனஸ்ட், செ.ராஜி, செல்வக்குமார், புருசோத்தமன், செல்வக்குமார், செயக்குமார், சிலம்பரசன், பிரவினா, வைரமணி, சுகந்தி யாழினி, கனல்விழி, கயல்விழி, யாழ்வெண்பா, மோகேஷ் உள்ளிட்ட கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

விசிக மண்டலச் செயலாளர் இரா.சுபாசு சந்திர போசு, மண்டல துணைச் செயலாளர் தி.ந.கோவேந்தன், தெற்கு மாவட்ட செயலாளர் வெற்றி கொண்டான், மாவட்ட விவசாய அணி துணை செயலாளர் சிவக்குமார், ஒன்றியச் செயலாளர் ந.வேலு ஒன்றிய செயலாளர் தோழர் செயக்குமார், ஒன்றிய துணைச் செயலாளர்கள் ரங்கன், கா.ப.ராஜா, ஒன்றியப் பொருளாளர் கந்தன், குமரன், விசிக வழக்கறிஞர் தங்கப் பாண்டியன், மாவட்ட இளைஞரணிச் செயலாளர் கொடி யுவராஜ், நகரத் துணைச் செயலாளர் விக்னேஷ், மாதேஷ், புல்லூர் முகாம் பொறுப்பாளர்கள் லாரண்ஸ், சங்கர், குமரேசன், ஆஞ்சி, அசோக், சம்பத் உள்ளிட்ட விசிக நிர்வாகிகளும், மக்கள் தமிழகம் கட்சி பொதுச்செயலாளர் செவ்வேள்,

திமுக தலைமைக் கழகப் பேச்சாளர் இராஜேந்திர பிரசாத், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி முல்லை, பெரியாரியப் பொதுவுடமைக் கட்சி மாவட்டத் தலைவர் மதனகவி, மாவட்டத் துணைச் செயலாளர் பகுத்தறிவாளன், திமுக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகி செந்தில் அகிலன், புரட்சிகர இளைஞர் முன்னணி கோபி, தொழிற்சங்க நடுவம் உருபன், மக்கள் தமிழகம் கட்சி சரவணன், அரங்க சிவலிங்கம், நடுப்பட்டறை சசிக்குமார் சமூக செயற்பாட்டாளர் சரன்ராஜ், முருகன் பூங்காவனம், குமார், முரளி சந்திப், பாண்டியன் உள்ளிட்ட தோழமை இயக்கத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திருப்பத்தூர் மாவட்டக் கழக அமைப்பாளராக புல்லூர் சுரேஷை நியமித்தார்.

# எதிர்வரும் நிகழ்வுகள்

- பொள்ளாச்சி, ஆனைமலை பகுதிகளில் திமுக வேட்பாளர் கே.ஈஸ்வரசாமி அவர்களை ஆதரித்து தெருமுனைக் கூட்டங்கள் ஏப்ரல் 6,7,8,9 ஆகிய 4 நான்கு நாட்கள் நடைபெற உள்ளன. இந்நிகழ்வின் இறுதியில், 7,8 ஆகிய நாட்களில் நடைபெறும் பொது கூட்டங்களில் தலைவர் கொளத்துர் மணி பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

இந்த நிகழ்ச்சிகள் திராவிட இயக்கங்களின் கூட்டமைப்பின் சார்பாக நடைபெறுகின்றன.

- திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் “மோடி ஆட்சி தொடரலாமா?” என்ற தலைப்பில் இந்தியா கூட்டணியை ஆதரித்து நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டங்கள் ஏப்ரல் 06,09 மற்றும் 10 ஆகிய தேதிகளில் மேட்டூர், கொளத்தூர், மேட்டூர் ஆர்.எஸ் உள்ளிட்ட மூன்று இடங்களில் நடைபெறவுள்ளது.

இதில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார். இதில் பாடகர் கோவன் குழுவினர் பங்கேற்கும் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted April 05, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran